


நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது ஸ்டாலின் தொடரட்டும் ... தமிழ்நாடு வெல்லட்டும்! திராவிட மாடல அரசின் சாதனை விளக்க தி.மு.க. பொதுக்கூட்டம் திருக்குவளையில் நடைபெற்றது. பொது கூட்டத்தில். கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா பேசினார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள். இராஜேந்திரன், பகோவிந்தராசன், ஒன்றிய கழக செயலாளர்கள் கீழ்வேளூர் தெற்கு கே. பழனியப்பன், கீழையூர் மேற்கு சோ.பா.மலர்வண்ணன், கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம் நீலமேகம், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சிவகுமார், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ. பாரிபாலன் மற்றும் பலர் உள்ளனர்.

### கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு

# கரும்பு கிரயத் தொகையை தாமதமின்றி வழங்கிட - ரூ.86.22 கோடி நிதி!

## சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தகவல்!

**சென்னை, மார்ச்.3 - 2025-26 அரவைப் பருவத்திற்கு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு கரும்பு கிரயத் தொகையை தாமதமின்றி வழங்குவதற்கு ஏதுவாக ரூ.86.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்துள்ளதாவது:-

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இதில் 2025-26 அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளும் கரும்பு அரவைப் பணியை மேற்கொண்டுள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட கழக அரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2025-26ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2024-25 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு முன்எப்போதும் இல்லாத அளவிற்கு, டன் ஒன்றுக்கு ரூ.349/- சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என அறிவித்து, 90,652 கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.246.14 கோடி நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன், ஒன்றிய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்குமேல் சிறப்பு ஊக்கத்தொகையாக முறையே 2020-21 அரவைப் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.192.50/- எனவும், 2021-22 மற்றும் 2022-23 அரவைப் பருவங்களுக்கு ரூ.195/- எனவும், 2023-24 அரவைப் பருவத்திற்கு ரூ.215/-எனவும் 2024-25 அரவைப் பருவத்திற்கு ரூ.349/- எனவும் வழங்கி கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.2,750/-லிருந்து ரூ.3,500/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2021 முதல் 2026 வரையிலான கழக ஆட்சியில் சிறப்பு ஊக்கத்தொகையாக 5,77,755 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் சுமார் ரூ.1,094.27 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2025-26ஆம் அரவைப் பருவத்திற்கு கரும்பு அனுப்பும்விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு கிரயத் தொகையை தாமதமின்றி விரைந்து வழங்கிட ஏதுவாக போதிய நிதி ஆதாரம் இல்லாத தர்மபுரி, எம்.ஆர்.கே., மதுராந்தகம், திருத்தணி, செய்யார், செங்கல்ராயன், மோகனூர், வேலூர், திருப்பத்தூர் ஆகிய 9 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் சேர்த்து மொத்தம் 11 சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.86.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன் மூலம் சுமார் 17,991 கரும்பு விவசாயிகள் பயன் பெறுவர்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் வரலாற்றில் முதன்முறையாக கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு கிரயத் தொகை தாமதமின்றி வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட சுமார் ரூ.2031.47 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் கழக அரசால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு, கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காகவும் சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு கிரயத் தொகையை உரிய காலத்தில் வழங்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவரும் தமிழ்நாடு முதலமை ச்சர் அவர்களுக்கு கரும்பு விவசாயிகளின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தெரிவித்துக் கொண்டார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# பெரம்பலூரில் கனடா நாட்டு புதுமணத் தம்பதிகள் கொண்டாடினர்!

## கழகத்தினர் பாராட்டு!

பெரம்பலூர், மார்ச். 3 - தமிழக முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை கொண்டாட கனடா நாட்டில் இருந்து, பெரம்பலூர் மாவட்டத்திற்கு வந்து புதுமணத் தம்பதிகள் கொண்டாடினர்.

பெரம்பலூர் மாவட்டம், விளாமுத்தூர் சாலை, ஆண்டாள் நகர் பகுதியைச் சேர்ந்த இலக்கியா - அஸ்வின் (எ) அரவிந்தன் இவர்களுக்கு கடந்த வாரம் திருச்சியில் திருமணம் நடைபெற்று கனடா நாட்டிற்குச் சென்று விட்டனர்.

இந்த புதுமணத்தம்பதிகள் கனடா நாட்டில் என்ஜினியராக பணிபுரிந்து வருகின்றனர். இவர்களது குடும்பத்தில் அனைவரும் அரசு உயர் பதவிகளில் உள்ளனர். நெடுஞ்சாலைத் துறை, மருத்துவத்துறை, வளர்ச்சித்துறை, கல்வித் துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்து, அதன்படி மார்ச், 01 ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் கனடா நாட்டில் உள்ள புதுமணத்தம்பதியையும் வரச்சொல்லி அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கேக் வெட்டி, மிகுந்த ஆரவாரத்துடன் கொண்டாடினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு கனடா நாட்டில் இருந்து பெரம்பலூர் வந்து கொண்டாடிய புதுமணத்தம்பதியையும் அந்த பகுதியில் உள்ள அக்கம்பக்கத்து வீட்டினர், உறவினர்கள் மற்றும் தி.மு.க.வினர் பாராட்டி வருகின்றனர்.

### கழக பொதுக்குழு உறுப்பினர்

# நாகை அம்மன் கே.பாண்டியன் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

நாகை, மார்ச். 3 –

நாகை மாவட்டம் நாகை நகரம் கழக பொதுக்குழு உறுப்பினர் நாகை அம்மன் கே.பாண்டியன் ( வயது 70) 1.3.2026 அன்று இரவு 10.00 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த எம். பாண்டியனுக்கு மல்லிகா பாண்டியன், மகள்கள் கனிமொழி அன்புச் செழியன், மாரீஸ்வரி ராஜபாண்டியன், சுமித்ரா முத்துக் குமார் ஆகியோர் உள்ளனர்.

நாகை நகரம் நீலா மேல வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த நாகை அம்மன் கே.பாண்டியன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

### சேலம் மாவட்டக் கழக முன்னோடி

# வீரா.பழனியப்பன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சேலம், மார்ச். 3- சேலம் மாவட்டத்தின் தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடியும். தி.மு.க. வில் பல்வேறு பொறுப்புகளை வகித்து தற்போது சூரமங்கலம் பகுதி அவை தலைவருமான வீரா. பழனியப்பன் (வயது 88) நேற்று (02.03.2026) அதிகாலை 3.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் சேலம் மாவட்டக் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு தி.மு.கழகத்தின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



நாம் தமிழர் கட்சியின் மாநில இணை ஒருங்கிணைப்பாளர் ஜஸ்டின் செல்வநாதன், த.வெ.க. உறுப்பினர் பரத் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது ஏற்காடு ஒன்றிய செயலாளர் கே.வி.ராஜேந்திரன் உடனிருந்தார்.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் வேளாங்கண்ணி பேரூர் தமிழக வெற்றிக் கழக பேரூர் செயலாளர் லூயிஸ் பிரபு அக்கட்சியில் இருந்து விலகி .பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தில் இணைந்தார் . உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், கீழையூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன்,வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஆட்சிக்கே வர முடியாத

# எடப்பாடி - தேர்தல் நேரத்தில் எதை வேண்டுமானாலும் அறிவிப்பார்!

## புதுக்கோட்டையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, மார்ச். 3-



ராஜ்யத்தில் பூஜ்ஜியத்தை காண்பவர் எடப்பாடி பழனிச்சாமி, பூஜ்ஜியத்தில் இல்லாமல் இருந்தாலும் ராஜ்யத்தை ஆள்பவர் முதல்வர் ஸ்டாலின்.

எடப்பாடி பழனிச்சாமி தேர்தல் நேரத்தில் எதை வேண்டுமானாலும் அறிவிக்கலாம்.

தேர்தல் நேரத்தில் அறிவித்துவிட்டுப் போற பழக்கம் தான் அவருக்கு உள்ளது.

அறிவித்ததை எல்லாம் நிறைவேற்றும் பழக்கம் தான் எங்களுக்கு உள்ளது பத்தாயிரம் அல்ல அவர் பதினைந்தாயிரம் கூட அறிவிப்பார்.

டெல்லியில் என்ன நடந்தது என்பதை பார்க்க வேண்டும். எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்கு வர முடியாத அவர் தரவும் முடியாது அதனால் அவர் ஒரு லட்சம் கூட அறிவிக்கலாம்.

ஏன் அவர் பத்தாயிரம் அறிவித்தார் என்பதுதான் எங்களுக்கு தெரியவில்லை. அவர் ஒரு லட்சம் கூட அறிவிக்கலாம்.

ராகுல் காந்தியும் தலைவர் தளபதி அவர்களும் பேசுவது தான் திமுக காங்கிரஸ் கூட்டணி குறித்த கேள்விக்கு எங்களது முடிவு. அதுதான் இறுதி .இந்தியாவிலேயே தளபதி அவர்களைப் போல வேறு எந்த தலைவர்களும் கூட்டணி கட்சிகளை அரவணைத்து சென்றதாக வரலாறு இல்லை. புதிய வரலாறை கடந்த 10 ஆண்டுகளாக ஸ்டாலின் உருவாக்கிக் கொண்டுள்ளார்.

விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை என்பதை போல் தளபதி அவர்களுக்கு நல்ல மனது திராவிட மாடல் ஆட்சி 2வது முறையும் தொடரும்.

மற்றவர்கள் பேசுவதைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. புதிய கட்சிகள் வரவின் மூலம் எங்களது கட்சியின் பலம் அதிகரித்துள்ளது.

அறிவாலயத்திற்கு டீ குடிக்க வருபவர்கள் எல்லாம் அழைக்கும் நிலைமையில் திமுக இல்லை. ஆனால் பேசியவர்களின் நிலைமை அப்படி இருக்கலாம்.

ஏனென்றால் அவர்கள் தான் தற்போது கூட்டணிக்கு யாரும் வருவார்களா என்று கதவை திறந்து வைத்துக்கொண்டு காத்திருப்பதோடு யாரும் இதுவரை வராததால் ஈ ஓட்டி கொண்டுள்ளனர்.

யார் வேண்டுமானாலும் எங்கள் கூட்டணிக்குள் வரலாம் இன்னும் தேர்தல் தேதி அறிவிக்கப்படவில்லை .

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி கூறினார்.




பெரம்பலூர் மாவட்டத்தில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" முதல் பிரச்சாரம், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம், பசும்பலூர் ஊராட்சியில் நடைபெற்றது. மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில் வீடு, வீடாகச் சென்று அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தனர். இதில் ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏர்வாடி அலிசேக் மன்சூர்

### மார்ச் 3 (2013)



தி.மு.க. தொடக்க நாட்களிலேயே தென் மாவட்டங்களில் கழகக் கொள்கைகளைப் பரப்புவதில் மாணவப் பருவம் முதல் ஆர்வமுடன் ஈடுபட்ட சிறந்த பேச்சாளரும் – கழகத்தின் மூத்த முன்னோடியும் – எந்நிலையிலும் தடம் மாறாதவர் இவர்.

கழக வரலாற்றில், முதல் நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டுச் செயலாளர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொழிப் போர் வீரர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“தான் கருப்புச் சட்டை அணிந்த காலத்திலேயே தன்னை அழைத்து, கூட்டம் நடத்தியவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**